# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**

சந்தாதாரரின் கவனத்திற்கு

| | |
|---|---|
| வருட சந்தா ரூபா | 9-00 |
| 6 மாத „ „ | 4-50 |
| 3 மாத „ „ | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 26-ம் இல.


# சர்வதேச ஆராய்ச்சிச் சங்கம் பாரிசில் இவ்வாரம் கூடுகின்றது

மூன்றும் முறையாக ஒன்றுகூடும் சர்வதேச தமிழ் ஆராய்ச்சிச் சங்கம் இவ்வருடம் ஆடி மாதம் 15-ம் திகதி தொடக்கமாக 18-ம் திகதிவரையும், பாரிஸ் நகரில் கல்வி கலாச் சாரத்துக்குப் பெயர் பெற்ற "பிரான்ஸ் கல்லூரி"யில் கண்ணியமிக்க பிலியோசஎன்னும்பெயர் பெற்ற பேராசிரியர் தலைமையில் நடைபெற இருக்கிறது. தமிழ்நாட்டு முதல் மந்திரி கருணாநிதி அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார். முதல் மகாநாடு கோலாலம்பூரில் 1966-ம் ஆண்டு நடந்தது. இரண்டாவதாக 1968-ல் சென்னை மகாநாட்டில் நடைபெற்றது. இவ்வருடம் நடக்க இருக்கும் மகாநாடு தமிழின் பெருமையை மேல்நாட்டாருக்கு நன்கு விளக்கி வைக்கும் நோக்கத்துடன் ஐரோப்பாவில் பாரிசில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டது. அடுத்த முறை நடக்க இருக்கும் மகாநாட்டை 1973-ம் ஆண்டு தைமாதம் இலங்கையில் நடத்த எத்தனிக்கின்றனர். சுமார் 200 அறிஞர் 39 தேசங்களிலிருந்து இதில் பங்குபெற இருக்கின்றனர் இத்தமிழ் ஆராய்ச்சிச் சங்கத்தை உருவாக்க இலங்கைத் தமிழராகிய தனிநாயக அடிகள் பலகாலமாக எடுத்து வந்த முயற்சி பலனளிப்பதைக் கண்டு நன்றியுடன் அவரை மனதில் கொள்வோமாக.

## ஜனதிபதி ரிற்ரோவிடமிருந்து பரி. தந்தைக்கு நற்செய்தி

6-வது சின்னப்ப தந்தை பாப்பரசராகி ஏழு வருட நிறைவு எய்திய ஆனிமாதம் 29-ம் திகதி யூகோசிலேவிய கம்யூனிஸ்ததேச ஜனதிபதி ரிற்ரோ பரி. தந்தைக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். அச் செய்தியில் "பரிசுத்த தந்தை உலகத்தின் நன்மைக்கும் சமாதானத்துக்கும் ஆற்றிவரும் சேவை சிறப்புற்று வளர அவருக்கு நீண்ட ஆயுளையும், நற்சுகத்தையும் ஆசிக்கின்றோம்" என்று அவர் கூறியிருக்கிறார்.

## பரி. தந்தை இலங்கையில் இரண்டொருநாள் தங்குவாரா?

பரிசுத்த தந்தை பிலிப்பைன் தீவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் போகும் வழியில் இவ்வருடம் கார்த்திகைமாதம் பிற்பகுதியில் இலங்கைவழியாகப் போவாரென்றும், அவரைக் கொண்டுசெல்லும் விமானம் கட்டுநாயக விமான நிலையத்தில் இறங்குமென்றும் ஆனிமாதம் 4-ந்தேதி வத்திக்கானிலிருந்து கொடுக்கப்பட்ட செய்தி கூறுகின்றது. ஆனால் பரிசுத்த தந்தை இலங்கையில் — எமது நாட்டு மண்ணில் எவ்வளவு நிமிடங்களோ, மணித்தியாலங்களோ, நாட்களோ தங்கிச்செல்வாரென்பதுபற்றி நாம் திடமாக ஒன்றும் கூற முடியாதிருக்கிறது. பரி தந்தையின் விமானம் கட்டுநாயகாவில் இறங்குமென்பதைக் கேள்விப்பட்டதும், எமது பிரதமரும், அவரது மந்திரி சபையினரும் ஒன்றுகூடி ஆலோசித்து அவரை விமானநிலையத்தில் அரசமரியாதையுடன் வரவேற்பதற்கு முடிவுசெய்திருக்கின்றனர். இதனால் இந்நாட்டுக் கத்தோலிக்க மக்கள்யாவரும மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இலங்கையில் பரி தந்தை தங்கக்கூடிய நேர அளவை அறிந்தபின்புதான் மறு ஆயத்தங்கள் நடைபெறும். பின் கிடைத்த செய்திகளின்படி பரி. தந்தை அவுஸ்திரேலியதேச சிட்னி நகரைக் கார்த்திகை 30 ஆம் தேதி சேர்வதாக அறிகிறோம்.

## தலைவில் பகுதியில் விசேஷ பள்ளிக்கூட விடுதலை

சிலாபமாவட்டத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் கல்வி பெறும் பிள்ளைகள் அப்பகுதியிலுள்ள புனிதசேத்திரமாகிய தலைவில் சந்தானுள் கோவிற் திருநாட்களில் பங்குபெறுவதற்கு வசதியா யிருப்பதற்காக கல்வி மந்திரியின் உத்தரவின்மேல் அப்பகுதிப்பள்ளிக்கூடங்களுக்கு விசேஷ விடுதலைநாட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்பகுதியில் தேவைப்படுமானல் ஆடி 22-ம், 23-ம் திகதிகளில் பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை கொடுத்து அத்தினங்களுக்குப்பதிலாக பின்வரும் போயாதினமுன் தினங்களில் பள்ளிக்கூடம் வைக்க அனுமதி யளிக்கப்பட்டிருக்கின்றது.

## சீனவில் சிறையிருந்த மேற்றிராணியாரின் முதற்பூசை

செஞ்சீனவிலே பன்னிரு ஆண்டுகளுக்கு மேல் சிறை வைக்கப்பட்டிருந்த ஓர் அமெரிக்க கத்தோலிக்க குரு சிரேஷ்டரான ஜேம்ஸ் எட்வாட் வால்ஷ் மேற்றிராணியார் அங்கே 1959 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட பின்னர் முதன் முதலாக இங்கே இன்று திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்தாரெனக் ஹொங்கோங்கிலிருந்து சென்ற 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

என்புருவாய்ப் பலவீன முற்றிருந்தவரும், பஞ்சுபோல் தலைமயிர் நரைத்திருந்தவருமான இந்த மேற்றிராணியார் தமது சொந்த வேண்டுகோளின் பேரிலே அன்று காலை 10 மணிக்குத் திவ்விய பூசை நிறைவேற்றினாரென்றும், அது தனிமையிலே நிறைவேறியதென்றும், ஆஸ்பத்திரிப் பணியாளர்களில் ஒரு சொற்பபேரே அதற்குச் சமுகமளித்தனரென்றும் தந்திச் சமாச்சாரம் தெரிவிக்கின்றது.

79 வயதுடையவரான இந்த மேற்றிராணியார் கடந்த பன்னிரு ஆண்டுகளாகச் சீனவிலே சிறைவைக்கப்பட்டிருந்தார். சீனவை விட்டு வெளியேறிய கடைசியான மிஷனரியாகிய இவர் முந்திய 10-ம்திகதி வெள்ளிக்கிழமை ஹொங்கோங் போய்ச் சேரலாயினர். இவர் ஷாங்காய் நகர சிறைச்சாலை ஒன்றிலே வேவுபார்த்தார், நாசவேலையில் ஈடுபட்டார்என்ற குற்றச்சாட்டுகளின் பேரிலே கடந்த பன்னிரு ஆண்டுகளாகச் சிறைவாசஞ் செய்துவந்தார். அன்றிரவு இவர் அமெரிக்காவிலே மேரிலாந்திலுள்ள கம்பர்லாந்தில் வசிக்கும் தமது குடும்பத்தினருடன் தெலிபோன் மூலம் சம்பாஷிக்கலாயினர்.

## குருமாணவர் பயிற்சிக்கு தீவிர நடைமுறைகள்

கத்தோலிக்க கல்விமுறையின் வளர்ச்சியைப் பராமரித்துவரும் வத்திக்கான் புனிதசபை குருமாணவர்களை விரத்தத்துவத்தை விரும்புபவர்களாகப் பயிற்சி அளிப்பதில் பெரும் கவனம் செலுத்தி வருகின்றது. 15,000 இலத்தீன் சொற்கள் அடங்கிய ஓர் அறிக்கையில் உலக மேற்றிராணிமாருக்கு இதில் பெரும் பாரம் சுமத்தி இருக்கின்றது. விரத்தத்துவத்தை வெளியிலிருந்து திணிக்கப்பெறுது தாமாகவே யேசுநாதருக்காக விரும்பும் மாணவர்களையே குருத்துவத்துக்கு அனுமதிக்குமாறு அவ்வறிக்கைகேட்டுக் கொள்ளுகின்றது. சகலர்மேலும் அன்புள்ளவர்களாக, விசேஷமாக வறியவர்கள்மேல் அன்புள்ளவர்களாகக் குருமாணவர் வளர்க்கப்பட்டால் பின்பு விரத்தத்துவத்தினல் வரும் தனிமையை அவர்கள் மேற்கொள்ள இலகுவாக இருக்குமென அவ்வறிக்கை கூறுகின்றது.

## ஜெனறல் தெ கோல்

பிரான்சிய ஜனதிபதி பதவியை ஜெனறல் தெகோல் அவர்கள் இராசிநாமாச் செய்தபின் அவரும், அவர் பாரியாரும் அயர்லாந்துக்குப்பிறகு தங்கள் விடுமுறையைத் தற்போது ஸ்பெயினிலே கழிக்கிறார்கள். அங்கே அவர்கள் கொம்பொஸ்ரெல்லா நகருக்குப் பரம்பரையான யாத்திரைப்பாதையைப்பின்பற்றிச்சென்று அங்கே அப்போஸ்தலரான சந்தியாகப்பரின் திருப்பண்டங்களை வணங்குவதற்கென அவர்பேராலுள்ள ஆசனக் கோவில் சென்றபோது பெருஞ்சனத்திரள் ஆர்ப்பரித்து அவர்களை வாழ்த்தியது. அதனைத் தரிசித்தபின் காம்படொஸ் என்ற கடற்கரைச் சுகஸ்தானத்திலுள்ள எட்டு அறைகளைக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## மருதமடுத் திருநாளுக்கு திருப்திகரமான சேவைகள்

இவ்வருடம் மருதமடு ஆடிமாதத் திருநாட்களின் போது மாதாவின் பக்தர்களது வசதிக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட பல சேவைகளும் திருப்திகரமாக இருந்ததுஎன்பதேபொது மக்களின் அபிப்பிராயம். புகையிரதச் சேவையும், பஸ்வண்டி சேவையும் தேவைக்குப் போதியதாயும், பிரயாணிகளின் சௌகரியத்துக்கு ஏற்றதாயும் இருந்ததுடன் அச்சேவைகளில் ஈடுபட்டிருந்த ஊழியர்களும் தக்கமட்டுமரியாதை உபசாரத்துடன் பிரயாணிகள் மட்டில் நடந்துகொண்டார்களெனக் கூறப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா ?

செம்பு, பித்தளைப் பொருட்கள் களிம்பேறியிருந்தால் லுமிச்சைச் சாற்றினால் காகு துடைத்துக் களிம்பைப் பாக்கிவிடலாம். இரும்புப் பொருட்கள் துருப்பிடிக்காமல் இருக்க மண் எண்ணெய், கந்தகத்திராவகம் முதலியவற்றால் தேய்த்து வைக்கலாம்.

உருளைக்கிழங்கின் தோலை ஊறவைத்த தண்ணீரில் வெள்ளிப் பாத்திரங்களைக் கழுவி, சுண்ணும்பு தேய்த்து வைத்துப் பின் கழுவி வையுங்கள். பளபளப்பாக இருக்கும.

கதவு, சன்னல் கண்ணுடிகள்மீது சிறிது சுண்ணும்பு தடவி வைத்துப் பின் கழுவினால் சுத்தமாகும். சுண்ணும்புடன் சிறிது கிளிஸரின்கலந்து தேய்த்து வைத்திருந்தால் அழுக்கு நீங்கிவிடும்.

கத்தி, பட்டவுடன் சிலகனிகள் கறைபடிந்து விடுகின்றன. அவைகளை நறுக்கியவுடன் உப்புக் கலந்த தண்ணீரில் போட்டு வைத்துப் பிறகு பயன்படுத்தலாம்.

கிருமிகளைக் கொல்லும் சக்தியும் இரத்தம் உறைவதைத் தடுக்கும் சக்தியும் வெள்ளைப் பூண்டுக்கு நிறைய உண்டு. நாள்தோறும் பாலில் வெள்ளைப் பூண்டை வேகவைத்துக் கடைந்து சிறிது சர்க்கரை சேர்த்துப் பருகுங்கள். நோயும் வாராது இரத்தக் கொதிப்பும் ஏற்படாது.

— சர்வவிபாபி

● நம் திருமறைக்காகத் தங்கள் உயிரைத் தியாகஞ் செய்து வேதசாட்சிகளான அப்போஸ்தலர்களில் முதல் வேதசாட்சியாகும் பாக்கியம் பெற்றவர் செபதேயுவின் குமாரனுகிய புனிதயாகப்பரே; நமது ஆண்டவரால் நேசிக்கப்பட்ட அப்போஸ்தலர்களில் முதலிடம்வகிக்கும் பாக்கியம் பெற்றவரும் செபதேயுவின் குமாரனுகிய புனிதஅருளப்பரே.



## நன்மரண ஞாபகம்

"இரக்கமுள்ள யேசுவே! ஆரோக்கியசாமியின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்."

மண்ணில் மறைந்தாலும் எங்கள் மனக்கண்முன் மாருதிருக்கும் என் ஆருயிர்க் கணவரும், அன்புத்தந்தையும், மாமனுரும், சகோதரனும், பேரனுமான ஞா. இ. ஆரோக்கியசாமி (இராசதுரை) அவர்கள் இறைவனில் மரித்த 8-வது ஆண்டு நிறைவு நாள் 16-7-70 என்பதைத் துயரமுடன் நினைப்பூட்டுகிறோம். அவர் ஆன்மா அமைதியும், ஒளியுமுள்ள இடம் சேரவும், புனிதர்களுடன் தோழமை கொள்ளவும் இறைவன் இரங்கியருள அவர் கருணையை இறைஞ்சும்படி அனைவரையும் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும் மனைவி, சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாதகல்.

## மட்டக்குழியில் மேலும் ஒரு வயோதிபர்சாலை

மூன்று வருடங்களுக்கு முன் கொழும்பு மாநகரின் வடபகுதியில் — மட்டக்குழியில் ஒருவயோதிபர்சாலை நிறுவப்பட்டது. ஆனால் அதில் சேர்ந்தவயோதிபரின் தொகை அதிகமாகி விட்டதால் மேலும் ஒரு சாலை கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அச்சாலையைக் கட்டி எழுப்பச் சிரமதான முறையும், செல்வத்தான முறையும் சென்ற வாரம் உபயோகிக்கப்பட்டது: அப்பகுதிப் பாராளுமன்ற அங்கத்தினர் வீ. ஏ' சுகததாசாவின் தலைமையில் மக்கள் ஒன்றுகூடி அக்கட்டிடத்துக்கு வேண்டிய சிமேந்துக் கற்களைச்செய்து சிரமதானம் செய்தனர். செய்த கற்களை அங்குள்ளவர் தத்தம் தகுதிகளுக்கு ஏற்ப பணம் கொடுத்து வாங்கிச் செல்வதானம்செய்துகொண்டனர். மாதந்தோறும் இத்தகைய தானங்கள் செய்து ஒருவருடத்தில் இரண்டாவது வயோதிபர்சாலையைக் கட்டிஎழுப்ப அப்பகுதி மக்கள் திட்டம் இட்டிருக்கின்றனர்.

**நீல் ஆம்ஸ்ட்ராங், விண்வெளி விமானக் குழுவிலிருந்து விலகுகின்ருர் :**

நிலவில் முதன் முதல் காலடி வைத்த விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங், விண்வெளி விமானக் குழுவிலிருந்து விலகி, நாஸா என்ற அமெரிக்க விண்வெளி விமானநிலையத்தில், உயர்தரத் தொழில் உற்பத்தி நிலையத்தின் துணை உதவி செறியாளராகப் பதவி ஏற்கப் போகிருர். அரசுக்கும் தனியார் தொழில் நுட்பப் பணிக்கும் இடையே விமான இயல்பற்றிய ஆராய்ச்சியாளராக இவர் பணி புரிவார்.

**உலகின் மிகப்பெரிய கட்டிடம் :**

நியூயோர்க் நகரிலுள்ள எம்பயர்ஸ்டேட் பில்டிங் என்ற கட்டிடம்தான் இதுவரை உலகிலேயே மிகப்பெரிய கட்டிடம் என்று புகழ்ப்பட்டுவந்தது. இதன்உயரம் 1250 அடி. இது 102 மாடிகளையுடையது. ஆனல் 1971-ம் ஆண்டு இறுதியில் திறக்கப்பட இருக்கும் உலகவணிக நிலையம் இதைவிடப் பெரியது. அதன் உயரம் 1350 அடி. இதில் 110 மாடிகள் இருக்கும். அமெரிக்காவின் ஏற்றுமதி, இறக்குமதி வணிக வளர்ச்சிக்கு இந்த உலக வணிகநிலையம் நடுநிலையமாக விளங்கும்.

## ஜீ. சீ. ஈ. (சாதாரண) மாணவருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

● யாழ்ப்பாணம், பிரதானவீதியிலுள்ள (இல: 110) இல்லத்தில் நவமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இளைஞர் கல்விநிலையத்தில் ஜீ. சீ. ஈ. (சாதாரண) பரீட்சைக்குரிய போதனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

● பயிற்றப்படும் பாடங்கள் :

(1) சமயம் (றோ. க.) (2) தமிழ்ப்பாஷை
(3) தமிழ் இலக்கியம் (4) ஆங்கிலம்
(5) பௌதிகம் (6) இரசாயனம்
(7) உயிரியல் (8) தூயகணிதம்
(9) பிரயோக கணிதம் (10) உயர் கணிதம்
(11) எண் கணிதம்

மாணவரின் தொகையையும், தேவையையும் பொறுத்து மறுபாடங்களும் ஒழுங்கு செய்யப்படும்.

● வகுப்புகள் காலை 8-30 தொடக்கம் பி: ப: 1-20 வரையும் நடைபெறும்.

● மாணவர் பிரவேசப்பணமாகப் 10 ரூபாவும் படிக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் மாதாந்தம் 5 ரூபாவும் முற்பணமாகச் செலுத்தவேண்டும்.

● ஒவ்வொரு வகுப்பிலும் குறிக்கப்பட்ட தொகைக்குமேல் மாணவர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

● எழுத்துமூலம் விண்ணப்பிக்கும்மாணவர், அதிபர், இளைஞர் கல்விநிலையம், த: பெ: இ. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும், நேரடியாக வருபவர் 110, பிரதானவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும், விரும்பினோர் தொலைபேசி இல: 229 இல் காலை 9—12 மணிக்கிடையிலும் தொடர்புகொள்ளவும்.

## கேளுங்கள் தருகிறேன்

| | ரூ. ச. |
|---|---|
| கோடி அற்புதர் அம்மானை புதிய பதிப்பு — விலை | 1 - 00 |
| பேரின்பக்காதல் | 20 |
| அன்னம்மாள் பிரார்த்தனை மங்களம் | 10 |
| செபஸ்தியார் பிரார்த்தனை மங்களம் | 10 |
| பத்திமா செபமாலை மாதா பிரார்த்தனை | 10 |
| ஆண்டவருடைய புதுமையுள்ள கல்லறைச்செபம் | 10 |

நூற்றுக்கு இருபது வீதம் கழிவு
முற்பணம் அனுப்பாத ஆடர் கவனிக்கப்படமாட்டாது.

எழுதுங்கள் :

எஸ். எம். இன்னுசிமுத்து உபதேசியார்,
[illegible] வீதி,
மாதகல்.

# திருந்திய ஆன்மா

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

நினைத்தது ஒன்று நடந்து ஒன்று. காலம் எனும் காட்டாற்று வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. இயற்கை அன்னையின் மடியில் இன்பமும், துன்பமும் மாறி, மாறி சுழலும் சக்கரம் போல் நிகழ்ந்த வண்ணமிருந்தன. லில்லி பிறந்து பதினைந்து வருடங்கள் ஓடி மறைந்தன. பருவத்தே செழிப்புற்ற மலரானுள். அதேசமயம் அவள் ஆன்மாவிலுள்ள ஞான மலர்கள் உதிர்ந்தன! தேவ அருட்கொடைகள்சிதறின! அடுத்த வீட்டிலுள்ள தனராஜ் எனும் இந்து வாலிபனை மனப்பூர்வமாகக் காதலித்தாள். பெற்ற தாயை மறந்தாள், உற்ற தந்தையை மறந்தாள், ஏன் எல்லோருக்கும் மேலாக இதயக் கோவிலிலே நாளும் குடியேறும் நாயகன் யேசுவையே மறந்தாள். நாளொருபொழுதும் நவநாகரீக, அரைகுறை ஆடை அணிந்து கொண்டு சினிமா, கடற்கரை, திருவிழா, மாதர் சங்கம் என்றெல்லாம் தனராஜுடன் பொழுது போக்கினுள். அவளின் மனம் மாற்றமுயன்ருள் அன்னை மேரி. அவனை மறக்க மறுத்தாள் கன்னி லில்லி. செய்தி கேட்ட தந்தை ஆத்திரம் தீருமட்டும் அடித்தார். பயன் கிட்டவில்லை. அம்மா! என்னுடலில் கடைசி இரத்தம் இருக்கும்வரை நான் அவரை அடைந்தே தீருவேன் என்று சபதமிட்டாள், மேரியின் இதயம் சுக்கு நூருக வெடித்தது. அவளின் கற்கோட்டை மணல் கோட்டையாயிற்று. தெய்வமே! நீ தந்த செல்வத்தை உனக்கே அர்ப்பணிக்க இருந்தேனே! இது என்ன சோதனை! என்று புலம்பினுள். அவள் அறிவு சிறிது சிறிதாக மயங்கியது. உணர்வற்றுக் கீழே சாய்ந்தாள். இவ்வுலகை மறந்தாள். இயற்கை அவளை இருகரம் நீட்டி அரவணைத்தது.

* * *

அத்தான் நம்ம லில்லியின் மனத்தை மாற்றி அவளை நல்வழிப்படுத்துங்கள். நான் அவளைப் பற்றி என்ன வெல்லாமோ கற்பனை செய்திருந்தேன். தேவனுக்குச் சித்தமில்லைப்போலும். எமது மதத்து வாலிபன் ஒருவனுக்கு மணம் முடித்து வையுங்கள். அப்போது தான் என் ஆன்மா சாந்தி அடையும். சேமக் காலையைவிட்டுவந்த பின்னும் மனைவியின் கடைசி வேண்டுகோள் போலின் காதுகளில் மீண்டும், மீண்டும் அலைமோதியது. சளைக்காது, விடாது செபித்தார். ஆனுல், லில்லியைப் பொறுத்தவரை ஒரு சிறிதும் மாற்றமில்லை. ஆலயத்தை நெருப்பென எண்ணினுள். இறந்த தாயை நினைத்திலள். தன் நாளாந்த கடமையையே மறந்தாள். தந்தையைத் துச்சமாக மதித்தாள். இரகசியமாக தனராஜைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டாள். இரு மாதங்கள் இன்பமாகக்கழிந்தன. தம்பதிகள் வாழ்வில். ஓர் நாள்...யாழ்தேவி தடம் புரண்டது....பலர் பலர் படுகாயம்! சிலர் உயிரிழந்தனர்! அவசர, அவசரமாகப் பத்திரிகையைப் படித்தாள், லில்லி. கதறி அழுதாள், புலம்பினுள். வைத்தியசாலையை நோக்கி ஓடினுள். அங்கு அடையாளம் தெரியாதபடி தனராஜ்ஜின் உடல் பண்டெச்சால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. லில்லி! நீ என் மேற் கொண்ட காதலால் உனது மதத்தையே வெறுத்தாய். அதற்கெல்லாம் காரணம் நான்தான் லில்லி! நான்தான். தெய்வபழி என்னைச் சூழ்ந்து கொண்டு விட்டது. நான் மரிக்க இன்னும் சில விஞடிகள் தான் இருக்கின்றன. இந்தத் தெய்வபழி நீங்க...நீங்க வேண்டுமானுல்... குரவர் ஒருவரை அழைத்துவா லில்லி. தன் பாவங்கட்காக மனஸ்தாபப்பட்டான். தனது ஆன்மாவைத் திருத்திய தேவனுக்கு நன்றிகூற ஓடினுள் லில்லி.

(யாவும் கற்பனையே)

## திருமதி சவிராசி மார்க் அமலனடி சேர்ந்த 11-ம் வருட மரண ஞாபகம்

"வருடங்கள் பதினொராண்டு
மறைந்தபோதும்
தாயே உன் முகம்மறந்த
நாளே இல்லை
பேசுகின்ற மதுரமொழி
சிரிப்புத் தோற்றம்
அன்னநடை நெஞ்சினிலே
எரியுதம்மா
அன்புடனே எமையணைத்த
அரியதாயே
உம் கருணையை எண்ணி எண்ணி
அழுது நொந்தோம்."

என்றும்எங்கள் மனதைவிட்டு மறவாத திருமதி சவிராசி மாக் இம்மண்ணுலக வாழ்வை நீத்து, விண்ணுலக வாழ்வெய்திய 11-ம் வருடம் நிகழும் 22-7-70-ல் பூர்த்தியாகிறது. அன்று நவாலி சம்பேதுருவானவர் தேவாலயத்தில் துக்கப் பாடற்பூசை வைக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சந்நியாசர், கன்னியர், அன்பர்களை இரக்கமுள்ள தேவன் இவவுக்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு மன்றுடும்படி விநயமாக வேண்டுகின்ருேம்.

பிரிவால் துயருறும் பிள்ளைகள் :

ஞ. குருசுமுத்து, அருளம்மா — மாக், சங். சிஸ். மேரி காமலின்டா, A. C.

பேரப்பிள்ளைகள் :

சங். சிஸ். அனல்லா, A. C. நேசம் பூதத்தம்பி, லில்லி மேரி திரேஸ் யேசுதாசன்.


நவாலி 85/70.

## நன்றியறிந்த தோத்திரம்

திவ்விய சற்பிரசாதத்தில் எழுந்தருளி இருக்கும் யேசுவின் திரு இரக்கத்தினுலும், தேவதாயர், சூசையப்பர், அந்தோனியார், யூதாததேயு, சின்னத் தெரேசா மற்றும் சகல புனிதர்களின் மன்ருட்டினுலும் நினைத்த காரியம் அனுகூலமாயிற்று. இவர்களின் நாமம் என்றும்புகழப்படுவதாக. நேர்த்தியின் படி பிரசுரிக்கின்றேன்.

ஓர் அடியாள்,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




அன்புள்ள தம்பி தங்கையரே வணக்கம்!

எதிர்வரும் ஆடித்திங்கள் 20ஆம் நாள் உங்கள் அனைவருக்கும் ஒரு சந்தோஷ தினம், அண்ணு ஏன் அவ்விதம் சொல்லுகிறூர் என்று சிலவேளை நீங்கள் கேட்கலாம். அப்படி என்ன மறந்து போய்விட்டீர்களா? எங்கள் ஞான ஆயர் மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரின் பெயர் கொண்ட பெருநாள் அதுதான் அல்லவா? அவர் சின்னப் பிள்ளைகளாகிய எங்கள்மேல் என்றைக்கும் மிகுந்த அன்புள்ளவர். அதனுல் நாங்களும் அவருக்குப் பதில் அன்பு காட்ட வேண்டும். பிள்ளைக்குரிய அன்புடன் நாங்களும் அவரை நேசிக்க வேண்டுமல்லவா?

அவர் பிள்ளைகளாகிய எங்களை உத்தம கத்தோலிக்க பிள்ளைகளாக ஆக்கிவிட வேண்டுமென்று பெரும் ஆசை கொண்டிருக்கிறூர். எங்களுக்கு நல்ல உலக கல்வியும், வேத கல்வியும் ஊட்டுவிக்க வேண்டுமென்ற ஆவல் கொண்டு உழைத்து வருகின்ருர்,

இன்னும் எங்கள் ஞானஆயர் எங்களுக்குச் செய்து வரும் நன்மைகளுக்காக நாங்கள் அவருக்கு நன்றி காண்பிக்க வேண்டும். காண்பித்து அன்று ஏதோ சிறு தெட்சணை ஒன்று அவருக்கு வைக்கத்தான் வேண்டும் அவர் விரும்பக்கூடிய தெட்சணைகள் காசு பணம் அல்ல, ஆனுல் அன்று தினம் நாங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நல்லாய் மன்ருட வேண்டுமென்றே அவர் விரும்புகின்ருர் அன்று நாங்கள் எல்லோரும் போய் அவரைச் சந்தித்து அவருக்கு எங்கள் சோபனம சொல்லமுடியாது மெய், ஆனுல் அவரை மனதால் வந்திக்கலாம், திவ்வியபூசை கண்டு நன்மை பெற்று சின்ன யேசுவை மன்ருடியும் செபமாலை முதலிய செபங்கள் செய்தும் அவைகளை எல்லாம் ஒரு ஞானப்பூச்செண்டாக அவருக்கு தெட்சணை வைக்கலாம், அப்போது அவருக்கு நிரம்பவும் சந்தோஷமாயிருக்கும். அப்படியே செய்வீர்களெனக் காத்திருக்கும்,

— அண்ணு

## உருவகக் கதை

# காவோலை சிரித்தது

வானத்தையே தாங்கி நிற்கிறேன் என்ற பெருமையில் அந்தப் பனைமரம் உயர்ந்து வளர்ந்திருந்தது. பசிய ஓலைகள்பல அதன் உச்சியில் எதுவித அச்சமுமின்றி உலக நடபடிகளை உற்றுநோக்கியவண்ணமிருந்தன. பசிய நினைவலைகள் அவற்றின் எதிர்காலத்தைச் சிந்திக்க இடமளிக்கவில்லை ஆனுல்......

நீண்டுநெடுகி வளர்ந்திருந்த மங்கல்நிறமான மட்டைகளில் இருபுறமும் கூரியவாள்போன்று அமைந்திருந்த கருக்குகள் இருக்கும்வரை எமக்குப் பயமே இல்லையென்ற நினைவுபோலும். பாதுகாப்புடன் கூடிய அந்த நீட்டுமட்டைகளின் உதவியுடன் அங்கும் இங்கும் அசைந்தாடி என்ன நடைபெறுகிறதென்பதை அறியத் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தன.

அவற்ருேடு... தன் தோற்றமேயிழந்து, நிறமும் வேருகி அந்தப் பசிய ஓலைகளின் பாதத்தையே தஞ்சமாகக்கொண்டு வரண்ட தன்உடலை அசைத்துக் கலகலவென ஓசை எழுப்பிக்கொண்டு தன் முடிவுகாலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது அந்தக் கிழட்டு ஓலை. அதன் போக்கு அந்த இளம் ஓலைகளுக்குப் பிடிக்கவில்லை. சப்தம் செய்யாதே என்று பலமுறை அவை எச்சரித்தும் அது கேட்கவில்லை அவற்றின் போக்குப் பிடிக்காததுதான் காரணமோ என்னவோ!

ஒருநாள் அந்தக் காவோலை அமைதியாய்ப்பேசியது. "சோதரங்களே! நானும் ஒருநாள் உங்களைப் போன்று உல்லாச வாழ்க்கை வாழ்ந்தேன்; பெருமைபேசினேன். ஆனுல் அவை அதிகநாள் நீடித்திருக்கவில்லை. முதுமை வந்தது; என் அழகைப் பறித்தது; இந்நிலையை எனக்களித்தது" என்றுகூறி முடிக்குமுன்னே அந்தப் பசிய ஓலைகளின் மத்தியில் உலகை எட்டிப்பார்ப்பதுபோல் வெளிவந்து கொண்டிருந்த குருத்தோலை காவோலையின் இப்பேச்சைக் கடிந்துகொண்டது. "கிழட்டு அசடே! மூடு உன் வாயை; எம் காலடிகளில் தஞ்சம் புகுந்திருக்கும் உனக்கா இவ்வளவு கர்வம் வந்தது? அதோபார்! பூமித்தாய் உன் உடலைச் சுவைக்கக் காத்திருக்கிருள்; சீக்கிரம் எம்மைவிட்டுப் பிரிந்துபோய்விடு; நீ இங்கிருப்பதால் எமக்கு நிம்மதியேயில்லை. அந்தக் குருத்தோலை சொல்வதை ஏற்றுக்கொள்வதுபோல் ஒருமுறை காற்றில் அசைந்தாடியது காவோலை. அப்போது...

பன்னக்காரப் பொன்னுச்சி பனையடிக்கு வந்தாள். அவனை அழைத்து, "அதோ! இருக்கிறதே அந்தக் குருத்தோலை (சார்வு) அதைவெட்டிவிட்டால் இரண்டு பெட்டிகள் இழைத்துவிடலாம்" என்ருள். அதற்கு அவன் மனையாளுக்கு மறு வார்த்தை பேசாது அந்தப் பனையில் ஏறினுன். கூரிய கத்திகொண்டு அந்தக் குருத்தோலையை வெட்டி வீசினுன். ஓ...ஓ... வென்று அலறியபடி பூமித்தாயைத் தஞ்சமடைந்தது அந்தக் குருத்தோலை. பொன்னுச்சி அதை எடுத்து இரண்டாக வெட்டினுள். சர்ரென்ற ஓசை. வெண்மையான அந்த ஓலையை வெயிலில் உலர விட்டாள், "இளங்குமரனே உன் கர்வம் எங்கே" என்று கேட்பது போல் அந்தக் காவோலை அசைந்தாடியது. வெயிலில் கிடந்துவேகும் அந்தப் பச்சிளம் பாலகனைக்கண்டு ஏனைய ஓலைகள் அனுதாபம் தெரிவிப்பதுபோல் அமைதியாகவிருந்தன. சுடுவெயிலில் துடியாய்த் துடித்த குருத்தோலையின் நிலைகண்டு உள்ளூர இரக்கம் இருந்தாலும் ஏனையவற்றுக்கும் ஒரு புத்திபுகட்ட விரும்பி கலகலவென்று சிரித்துக்கொண்டேயிருந்தது காவோலை.

இ. ...ராஜ்

# பாட்டியின் பேட்டி (2)

[முன்தொடர்ச்சி]

**அன்பு:** வந்தனம் பாட்டி. நேற்றுச் சொன்ன கதையைத்தொடர்ந்து சொல்லுங்களேன்.

**பாட்டி:** சரி, சொல்லுகிறேன், கவனமாகக் கேட்க வேண்டும். முத்திப்பேறு பெற்ற பட்டமென்றல்லவா சொன்னேம்? கத்தோலிக்க திருச்சபையிலே ஞானத்தீட்சை பெற்ற நாமெல்லாரும் திருச்சபையின் குடும்ப இடாப்பிலே பேர் பதியப்பட்டவர்கள். மற்றவர்களெல்லாரும் பதியப்படவேண்டியவர்கள். கடவுளின் பிள்ளைகளாகும் உரிமை பெற்ற நாம் அந்த உரிமையை மதித்து, அதனுல் வரும் உதவிகளைப் பாவித்து எங்கள் மோட்ச இலட்சியத்துக்கு எங்களைத் தயார்செய்யவேண்டும். கடவுள் நமக்குத்தந்த மாதிரி மனிதனுன யேசுக்கிறீஸ்துவின் போதனையையும் சாதனையையும் பின்பற்றி இறைமகனின் உருவை எங்களிலே வடிக்கவேண்டும். இந்த மனுவாழ்வின் பிரதானமான வேலையைப் பிரமாதமாகச் செய்த சிலரைத் தாயான திருச்சபை பகிரங்க மரியாதைசெய்து எமது கண்முன்னுல் மாதிரிகையாக வைக்கிறது. அவர்கள் வாழ்க்கையை ஆராய்ந்து அவர்கள் தங்கள் வாழ்க்கைப் பரீட்சையிலே சித்தியடைந்தவர்கள், அதாவது மனித சீவியத்தின் இலட்சியமான இறைவனேடு ஒன்றித்து வாழும் நித்திய முத்திநிலையைப் பெற்றவர்கள், என்று திருச்சபை பிரகடனப்படுத்துகிறது. அவர்களுடைய வாழ்க்கையை நாமும் பின்பற்றினுல் நாமும் நம்மிலே இறைவாழ்வை நிறைவாக்கலாம் என்று உற்சாகப்படுத்துகிறது. தந்தைபோல மைந்தன், தாய்போலே சேய், முத்தர்போலேதான் பக்தர்.

தேவன் தந்த நல்ல செய்தியை நமது நாட்டிலே போதிக்கத் தமது ஆயுளை அர்ப்பணித்த யோசேவாஸ் முனிவரையும் புனிதர் வரிசையிலே வைக்க முயற்சி நடைபெறுகிறது. அவருடைய சரித்திர ஆராய்ச்சி, புதுமைகளின் விசாரணை போன்றவை பிரதானமானவை. கடவுளின் கருணையால் இந்த முயற்சி சித்தியாக முடியவேண்டுமென்றுதான் நாமெல்லாரும் செபமும் தபமும் செய்துவருகிறேம். இதனுல் நமது ஞானப் பிதாவான முனிவர்மட்டில் நமக்குள்ள பக்தியையும் நன்றியையும் காட்டுகின்றேம். இது பண்புடைய மக்கள் செய்யவேண்டிய கடமை. "எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் — உய்வில்லை, செய்ந்நன்றிகொன்றமகர்க்கு" என்று திருவள்ளுவரும் சொன்னுரல்லவா?

**நந்தா:** அடே! பாட்டிக்குப் பாட்டுகளும்பாடமாயிருக்கே. வள்ளுவர் ஒரு அஞ்ஞானப் புலவன் என்றல்லவா வகுப்பிலே சொன்னுர் வாத்தியார். பத்திப்பூண்டான எங்கள் பெத்தா எங்குதான் இதைப் படித்தா என்பது அதிசயமாயிருக்கே.

**பாட்டி:** என் அதிசயம்? இப்போது உள்ள பிள்ளைகளுக்கு அரசாங்கச்செலவிலே கல்வி. புத்தகப் பொதியைச் சுமந்துகொண்டு, நடப்பாக, விடுப்பாக உடுத்திக்கொண்டு பாடசாலைக்குப் போகிருர்கள். ஆனுல் அவர்களுக்குக் கல்வியிலே ஆர்வமோ ஆசையோ அற்பமேனும் உள்ளதோ அறியோம். அந்த நாளிலே உடுத்தது ஒருதுண்டு சீலை, எடுத்துப்போனது ஒரு சட்டம் ஓலை, படித்ததென்ருலோ பண்டிதர் போலே.

**நளினி:** அச்சா பெத்தாச்சிக்கும் புழுகத் தெரியும் போலிருக்கு. கிளிப்பிள்ளை போலே சில செய்யுட்களைப் பாடப்பண்ணிப்போட்டு எங்களோடு போட்டிபோடப் பார்க்கிறு! அந்தநாளிலே விஞ்ஞானம் என்றபேரே தெரியாதே. நவீன நாகரீக முன்னேற்றத்தோடு மனனபாடம் பண்ணும் பழக்கம் தேவையில்லையென்று புத்தகத்திலே வாசித்தேனே.

**பாட்டி:** விஞ்ஞான முன்னேற்றம் நன்மையானதென்பதில் ஐயமேதுமில்லை. ஆனுல் இதனை இன்றை மனிதசமுதாயம் துர்ப்பிரயோகம் செய்து வேர்நாசம் தேடுகிறது. அரை அறிவு, கால் அறிவில் நிறை அறிவு இல்லை. தன்னைப் படைத்த கடவுளை அறிய அறியாதவன் அஞ்ஞானி. கடவுள் அறிவித்த மறைமுறையைக் குறைவற அறிந்து ஏற்றுக்கொண்டவன்தான் மெய்ஞ்ஞானி. திருவள்ளுவர் உலக ஞானத்தைப் படிப்பிப்பதால், அதோடு வீட்டுக்குவழியான அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் தமிழ் மரபுப்படி விளக்குவதால் அவரை மெய்ஞ்ஞானிகள் வரிசையிலே சேர்ப்பதுதான் சரி. அவருடைய முதலதிகாரமே கடவுள்பற்றிச் சமணமுனிவர் போதித்த அரிய கருத்துக்களை அறிவிக்கிறது.

மறுசார், நிறைவான இறைவனை அறியாத அறிவும் ஓர் அறிவா? இன்றைய விஞ்ஞானம் மனிதனுக்குத் தலைவீக்கம் மட்டும் தருவதால் அதை அஞ்ஞானம் என்றாலும் பொருந்துமல்லவா? காலத்திலும் பாடியிலும் கட்டுப்பட்ட உடலிலே, உலகிலே வாழும் மனிதன் இவற்றைக் கடந்த ஆன்ம சக்தியால் இயற்கையை ஆராய்ந்து அரிய செயல்களைச் சாதிக்கிறுன். ஆனுல் இந்தச் சர்வ சராசரங்களையும் அதன்சிகரமான மனிதனையும் ஆக்கி ஆளும் அவன் முன்னுலே சிரம் குனிந்து கரம் குவித்து கும்பிடு போடாமல் வீண் பெருமை பேசுவது வெறும் மமதை, என் பெரிய பேதமை.

**குமார்:** வேதபோதகத்தில்நின்று விஞ்ஞான தத்துவத்துக்கு வந்துவிட்டீர்களே. ஈழம் வாழ வேதம் வளர்த்த பெரியாரின் சீவிய சரிதையைப் பரப்ப நமது அதிகாரிகள் ஆவன செய்தாலல்லோ அவரின் புனித வாழ்க்கையின் பலன் நம்மவருக்கும் கிடைக்கும். அப்படியான புத்தகமோ பிரசுரமோ உண்டா பாட்டி?

**பாட்டி:** பல ஆண்டுகளின் முன்னே அப்படி ஒன்று படித்த ஞாபகமுண்டு. அவருடைய கதையை முதியோர் சொல்லவே நாங்கள் கேட்டுப் படித்தோம். அதோடு கும்மி, அம்மானை போன்ற பாடல்களிலும் பழைய சம்பவங்களை எங்களுக்குச் சொல்லிக்கொடுத்தார்கள். அவற்றிற் பலவற்றை நான் இன்றும் மறக்கவில்லை. நீங்கள் கரிசனை காட்டினுல் சொல்லித்தரத் தயார். ஆனுல் அது வேறொரு நாளில். இப்போது உங்கள் விளையாட்டுக்குப் போங்கள்.

**குமுதம்:** மறக்காமல் மறுமுறை பாட்டுகள் சொல்லித்தர வேண்டும். பெரிய உபகாரம் பாட்டி! போயிற்று வாறேம்.

## குட்டி

— சி. சுதந்திரராஜா —

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மிருது வான பூனைக்குட்டி
முயாவ் முயாவ் முயல்குட்டி
மூங்கில் காட்டுள் ஓடுங்குட்டி!

*

இம்மா இம்மா கன்றுக்குட்டி
இடறித் துள்ளுங் கன்றுக்குட்டி
சும்மா சும்மா பால் குடித்தால்
சுறு சுறுப்பாய் வளருவையோ!

*

கீக் கீக் குரங்குக்குட்டி
கீழும் மேலும் தாவுங்குட்டி
சீக் சீக் பன்றிக்குட்டி
சேற்று மண்ணைத் தின்னுங் குட்டி!

*

கொர் கொர் சிங்கக்குட்டி
கொழுத்து வளருஞ் சிங்கக்குட்டி
கொம்பு கொண்ட புள்ளிமானை
கொன்று தின்னும் சிங்கக்குட்டி!

*

வள் வள் நாய்க்குட்டி
வாலை யாட்டிக் காட்டுங்குட்டி
லொள் லொள் ஓசைதந்தே
கள்ளர் ஓடவைக்கும் குட்டி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமரபினருக்காகச் செபிப்பவர்கள் எத்தனைபேர்?

(எஸ். எம். ஜே.)

கிறிஸ்தவ இல்லங்களிலே நாலுபேர் கூடிவிட்டால் பல சமாச்சாரங்களுடன் குருமாரைப் பற்றியும், துறவிகளைப் பற்றியும், கன்னியரைப் பற்றியும் ஏதாவது கதையாமல் இருக்கமாட்டார்கள். பொதுஇடங்களிலும், சந்திகளிலும் கூட கிறிஸ்தவர்கள் சமபாஷணைகளில் காரசாரமாக இடம்பெறும் விடயம் குருமரபினரைப் பற்றியதே. இன்று பத்திரிகை உலகிலும் அவ்வப்போது குருமாரைப்பற்றிய செய்திகள் அடிபடுகின்றன. ஆயிரத்தில் ஒரு குருவோ, ஒரு கன்னியாஸ்திரியோ அல்லது ஒரு துறவியோ தவறிவிட்டால் அதைப் பெரிதுபடுத்தி, சோடித்துப் பெரியஎழுத்துக்களில் செய்திகளைப் பிரசுரித்து விடுகிறார்கள். பத்திரிகை விலைப்பட வேண்டும்என்ற நோக்கமேதவிர பத்திரிகாதர்மமோ, தனிப்பட்டவர்களின் மான உணர்வுகளோ இங்கு சீர்தூக்கப்படுவதில்லை. குருமார் புரட்சி செய்கிறார்கள்; பாப்பரசரை எதிர்க்கிறார்கள்; புதியஅணி திரளுகிறார்கள் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. திருச்சபையைவிட்டு விலகுபவர்கள் பற்றியும், குருத்துவ அந்தஸ்தைத் துறப்பவர்கள் பற்றியும் நாம் வாசிக்கத் தவறவில்லை.

கிறிஸ்துநாதரின் பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவர் துரோகியாக மாறவில்லையா? இது நூற்றுக்கு ஆக எட்டு வீதமே. இன்றைய கத்தோலிக்க உலகில் புரட்சிசெய்பவரும், பிரமாணிக்கம் தவறுபவர்களும், யூதாஸைப் போன்றவர்களும் எட்டுவீதத்தில் மிகக் குறைவுஎன்றே கூறவேண்டும். ஏராளமான குருமாரும், கன்னியரும், சந்நியாசிகளும் உத்தம தனத்திலே சிறந்து, பிரமாணிக்கமாக இறைபணி புரிகின்றனர். தங்கள் அழைத்தலை நன்குணர்ந்து, ஆத்தும இரட்சணிய அலுவலை மனநிறைவுடனும், தளராத உற்சாகம், உறுதியுடனும் ஆற்றுகின்றனர். உலகம் எது கூறினாலும், தம்மைப்பற்றி எவ்வித அபிப்பிராயம் தெரிவித்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது தெய்வ அன்புடனும், இறை நம்பிக்கையுடனும் தியாகத் தொண்டு ஆற்றுகின்றனர். அவர்களுக்கு மறுஉலகில் சம்பாவனை உண்டு. பசாசு தனது பலம்எல்லாம்கூட்டி தேவஊழியத்தில் ஈடுபட்டிருப்பவரைச் சிதறடிக்க, பிரிக்க, பலவீனப்படுத்த முயற்சிசெய்துகொண்டே வருகின்றது. இவ்வளவுக்கும் எதிர்த்துப் போராடி புனிதர்கள் ஆனோர் எவ்வளவுபேர். பாத்திமாபதியிலே தேவஅன்னை தூர்மாதிரிகையான குருமாரைப்பற்றி எச்சரிக்கையும், கவலையும் தெரிவித்திருப்பதை இவ்விடம் கவனிக்க வேண்டும். "குருமார் பரிசுத்ததனம் உடையவராய் இருக்கவேண்டும். மிகுந்த பரிசுத்தம் அவர்களில் விளங்கவேண்டும். திருச்சபைமட்டிலும், ஆன்மாக்கள் மட்டிலுமே அவர்கள் அதிக சிரத்தை உடையவர்களாயிருக்கவேண்டும். அவை தவிர்ந்த ஏனையகாரியங்களில் அவர்கள் புலன்செலுத்தக் கூடாது. பாப்பரசருக்கும் மேலதிகாரிகளுக்கும் அமைச்சலினம் காணபிக்கும் குருமார்மட்டில் நமது இரட்சகர் அதிக கவலையுடையவராயிருக்கிறார்" என்பதே தேவஅன்னையின் மொழிகளாகும். அன்னையின் இந்த எச்சரிக்கை அநேகருக்கு என்றும் உள்ளத்தை உறுத்த வேண்டும்.

குருமார்மட்டில் இல்லறத்தோருக்கும சாதாரண கிறிஸ்தவர்களுக்கும பாரதூரமான கடமை உண்டென்பதை அநேகர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஒருவர் குறிப்பிட்டிருப்பதுபோல, "குருமரபினர் எமமைக் கைவிடவில்லை. நாமதான் குருகுலத்தைக் கைநெகிழ்ந்தோம். திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் குருமரபினருக்காக நாமசெபிக்காது இருப்பதன்மூலம் நமது கடமையில் தவறி அவர்களைக் கைவிட்டுவிட்டோம். அதனாலேயே குருமாரிலும், துறவிகளிலும், கன்னியர்களிலும் பலர் தவறிழைக்கவும், வழிதவறவும், தூய்மை கெடவும, நெறிபிறழவும் ஏதுவாகிறது. எத்தனையோமுறை குருமாரின் ஆசீர் பெற்றோம; அவர்களுடைய செபஉதவி கேட்டோம். அவர்கள் கைகளினாலே நமது கருத்துகளுக்காகத் திருப்பலியும் ஒப்புக்கொடுத்தோம். ஆன்மகாரியங்களில் அடிக்கடி அவர்களிடம் போயிருப்போம். அன்றாட வாழ்க்கையில் பலசந்தர்ப்பங்களில அவர்கள் உதவியை நாடியிருப்போம். ஆனால, அவர்களுக்காக நாம் எத்தனை முறைசெபித்திருப்போமோ?" இவ்வார்த்தைகள் மிகவும் உண்மை நிறைந்தவை. ஆணித்தரமான இவ்வுண்மையை நாம் உணரவேண்டும்.

வாழுகின்ற திருச்சபை மக்களாகிய நாம நமது செபத்தினாலே ஐக்கியப் பிரயோசனத்தில் பங்குபெற வேண்டும். குறை கூறுவதும், குற்றங்கள் பிடிப்பதுமே நமது அன்றாட வாழ்வாக எம்மில் ஊறிவிட்டது. தீர்ப்புவழங்கவும் நாம் பின்னிற்பதில்லை. கடவுளுக்கு மாத்திரமே தீர்வையிட உரிமை உண்டுஎன்பதை நாம் மறந்து விடுகிறோம். யேசு அன்று தம்முன் நிறுத்தப்பட்ட பாவியான பெண்ணுக்கு வழங்கியதீர்ப்பு நமக்கும வழங்கப்பட வேண்டுமா? அப்படியானால், "உங்களில் குற்றமில்லாதவர் முதற்கல்லை எறியட்டும்" என்று யூதமக்களுக்குக் கூறியதுபோலவே நமக்கும் கூறுவார். நாம் பிறருடைய குற்றங்களைச் சீர்தூக்க முயலுமபோது கிறிஸ்துவின் வார்த்தைகள் நமக்குப் படிப்பினையாக வேண்டும்.

குருமாரும், குருமரபினரும் மனிதர்களே அவர்களும் ஆசாபாசங்கள், சரீரபலவீனங்கள், குறைபாடுகள் உள்ளவர்களே. எனவே அவர்கள் பிழைவிடுவதும், தவறுவதும் இயல்பே. அவர்களுக்கு [illegible] தோசைவிடப் பொ[illegible]ளும், அந்தஸ்தின் கடமைகளும் அனந்தம். பிரச்சினைகள், நெருக்கடிகள் நிறையஉண்டு. சோதனைகளும், அனுகூலங்களும், பிரதிகூலங்களும் ஏராளம். தமது அன்றாட வாழ்க்கையில் பலதரப்பட்டவர்களை எதிர்நோக்கும் குரு, எல்லோரையும் திருப்திப்படுத்தி விடவும் முடியாது. குருமாருக்கு உள்ளப் போராட்டங்களும் மனவேதனைகளும் உண்டு. இவற்றை ஏற்கவும் சகிக்கவும் வெற்றிபெறவும், சமாளிக்கவும் தாங்கவும் அளவற்ற பொறுமை, சகிப்புத்தன்மை, தாராள குணம், தாழ்மை, தன்னடக்கம் என்பன அவசியம். இவற்றை எல்லாம் தனியாக ஒருவர் தமது பலத்தால் அடைந்துவிடமுடியுமா? முடியவே முடியாது. எனவே, சாதாரண கிறிஸ்தவர்கள், இல்லறத்தோர் செப உதவி குருமரபினருக்கு மிகமிக அவசியம். குற்றமும் குறையும் காணவிழையும் நாம் நமது கடமையைச் செய்தோமா? அவர்களுக்காகச் செபித்தோமா? நமது தபமுயற்சிகளை, புண்ணியங்களை அவர்களுக்காக ஒப்புக்கொடுத்தோமா? இவற்றை நாம் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

தற்காலத்தில் தன்னலம் மிகுந்துள்ளது. செபத்தில்கூட தன்னலமே மேலோங்கி யுள்ளது. செபத்தைப்போல சிறந்த ஆயுதம் உலகில் எதுவும் இல்லை. சுயநலத்தோடல்ல, பொதுநலனுக்காகவும் செபிப்போம். குருமரபினருக்காக நாம் அதிகம் செபிப்போம். அதுவே நமது தலையாய கடன். குருமரபினர் புனிதம் அடைய, நிறைவுடையவராக, நடுநிலைபெற, அவர்கள் சேவை சிறக்க அவர்களைத் தூற்றுவதையும், கண்டிப்பதையும், குறை கூறுவதையும் விடுத்து [illegible]

# திருந்திய ஆன்மா

(செல்வி இராசேஸ்வரி ஆபிரகாம் — தும்பளை)

கதிரவன் தன் பொற்கதிர்களை பூமியெங்கும் பரப்புகிறான். பறவையினங்கள் தத்தம் கூடுகளைவிட்டுப் பறக்கின்றன. பூமியை மூடி இருந்த பனித்துளி மெல்ல, மெல்ல நீங்குகிறது. கதிரவன் வரவு கண்டு கமல மலர் மலர்கிறது. கோவில் மணி டாங்...டாங்......டாங் என நாதகீதம் பொழிகிறது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுகிறாள் மேரி. அடுக்களையை நோக்கி அவசர, அவசரமாக விரைகிறாள். சமையலைச் சீக்கிரமாக முடித்துக் கொண்டு மகள் லில்லியையும் கணவன் போலையும் எழுப்பி ஞாயிறு தினத்தை நினைப்பூட்டுகிறாள். மூவரும் மாதா கோவிலுக்குச் சென்று பயபக்தியோடு திவ்விய பூசை ஒப்புக் கொடுக்கின்றனர். குருவரின் மறையுரைகளை நெஞ்சகத்தே நிரப்பி, அலசி, ஆராய்ந்து அளவளாவிக் கொண்டு வருகிறார்கள் அந்தக் குடும்பத்தவர்கள்.

* * *

மேரியும், போலும் பிள்ளைப் பாக்கியம் இல்லையே என்று எட்டு வருடங்களாகத் தவமிருந்தார்கள். அவர்கள் வேண்டாத தெய்வங்களில்லை; செல்லாத கோயில்கள் இல்லை. தேவ கிருபையால் எட்டு ஆண்டுகளின் பின் லில்லி பிறந்தாள். தம் கண்ணைப் போற்றி வளர்த்தார்கள். அவளைத் தேவ அன்பில் ஊன்றி வளர வித்திட்டார்கள் பெற்றோர்கள். கத்தோலிக்க பாடசாலையில் சேர்த்து கல்வி புகட்டினார்கள். லில்லி ஞான அறிவில் சிறந்த பயிற்சி பெற்றாள். ஞானோதேயப் பாடங்களில் பற்பல பரிசில்களும், நிரம்பிய மார்க்குகளும் பெற்றாள். வளர, வளர தெய்வ பக்தியிலே வளர்ந்து கொண்டு வந்தாள். எப்படியாவது லில்லியை இறைவனுக்குத் தொண்டு செய்ய அர்ப்பணிக்க வேண்டும் என்று எண்ணங் கொண்டாள், அன்னைமேரி. மெதுவாக இது பற்றி தன் கணவனிடம் கூற ஆரம்பித்தாள். அத்தான்! நம்ம லில்லி தேவ பக்தியிலே சிறந்து விளங்குகிறாள். சில வேளை அவளுக்கு அழைத்தல் இருக்கக் கூடும். மனப்பூர்வமாக அவளைத் தேவனுக்கு அர்ப்பணிக்க நான் விரும்புகிறேன். உங்களுக்கு...எத்தனை காலமாகத் தவமிருந்தோம், வணங்காத புனிதர்களில்லை, செல்லாத பிரயாணங்கள் இல்லை, எவ்வளவு தவமிருந்து பெற்ற செல்வத்தை விட்டுப் பிரிவதென்றால் எப்படி முடியும் மேரி? என்ன அத்தான்! கடவுள் தானே நமக்குக் கொடுத்தார்; நமது நன்றியைத் தெரிவிக்க வேண்டாமா? எமது அன்புக் காணிக்கையை கட்டாயம் அன்பர் யேசு ஏற்றுக்கொள்ளுவார். நமக்கு எவ்வளவு மேலான பாக்கியம் கிடைத்திருக்கிறது. சரி மேரி உன் இஷ்டம் என்று பதிலளித்தார் போல். மேரியின் ஆனந்தத்திற்கோ எல்லை இல்லை.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# இரு வேறு மனிதர்

(வாகரைவாணன்)

மூட்டை வண்டி தள்ளி — ஒருவன்
முதுகு ஒடிகிறான்
பாட்டுப் பாடி ஒருவன் — காரில்
பவனி வருகிறான்.

✻

வயிற்றுக் குணவின்றி — ஒருவன்
வாடிச் சாகிறான்
வயிறு வீங்க உண்டு — ஒருவன்
வருத்தந் தேடுகிறான்.

✻

படுக்க இடமே யின்றி — ஒருவன்
பாதையிற் கிடக்கிறான்
அடுக்கு மாளிகை கட்டி — ஒருவன்
அலங்காரஞ் செய்கிறான்.

✻

மனதைக் கல்லாய் மாற்றி — ஒருவன்
மக்களை விற்கிறான்
தனயன் ஒருவன் வேண்டி — ஒருவன்
தருமஞ் செய்கிறான்.

✻

கந்தற் துணியைக் கட்டி — ஒருவன்
கால்நிர் வாண மாகிறான்
அந்தந்த நேரத்திற் கொன்றாய் — ஒருவன்
ஆடைகள் மாற்றுகிறான்.

✻

ஏச்சும் பேச்சும் வேண்டி — ஒருவன்
இருகை ஏந்துகிறான்
பேச்சும் பாட்டு மாக — ஒருவன்
பெருவிருந் துண்ணுகிறான்.

✻

ஏழை என்ப தாலே — ஒருவன்
ஏய்க்கப் படுகிறான்
ஆளை விழுங்கிப் பிழைத்து — ஒருவன்
அதிகாரஞ் செய்கிறான்.

✻

வெயர்வை ரத்தமாக — ஒருவன்
வெந்து உழைக்கிறான்
முயற்சி எதுவு மின்றி — ஒருவன்
முதலாளி ஆகிறான்.

✻

நினைத்த இன்பம் துய்த்து — ஒருவன்
நீண்டு படுக்கிறான்.
மனத்தின் உணர்ச்சி அழித்து — ஒருவன்
மரமாய்க் கிடக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகாதே போகாதே என் புதல்வா!

**கண்கள் இரண்டும் கலங்க, அவற்றிலிருந்து கண்ணீர் துளித்து இரு கன்னங்களையும் நனைக்க, இரக்கமான பார்வையோடு ஏதோ இரந்து கேட்பார்போன்று தன் புதல்வனை விழித்து, "போகாதே, போகாதே என்புதல்வா, என் புத்தியைத் தட்டி நீ போகாதே, பொல்லாதார் துன்மதி கேளாதே, பொல்லாப்பு வந்துநீ மாளாதே, தோழர்கள் வந்துன்னைச் சூழ்வார்கள், தொட்டுக்கொள் அம்மா தொட்டுக்கொள்ளென்று தட்டிச் சுற்றிக்கொண்டு போவார்கள். கெட்டு நொந்துபோவாய் தட்டழிந்து."**

ஒரு பிதாவுக்கு இருபுதல்வர் இருந்தனர். இருவரும் செல்வந்தரான தங்கள் பிதாவின் வீட்டில் செல்வமாக வளர்ந்து, இன்பமாக வாழ்ந்தனர். பணத்திற்குக் குறைவில்லை. அதேபோல் காணி பூமி, கமம்புலம், ஆடுமாடு ஆகியவற்றிற்கும் குறைவில்லை. கூலியாட்களுக்கும் குறைவில்லை. அதனால் இருவரும் ஒன்றுலொன்று குறைவின்றி நன்றாக வாழ்ந்து எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்கள்.

அவ்வாறாக, நல்லமரத்தில் புல்லுருவி பற்றியதுபோலும், கல்லான மாணிக்கக்கல்லில் களங்கம் உண்டானதுபோலும் இளையவனின் மனதிலும் இருந்தாற்போல் புரட்சிகரமான ஒரு சிந்தனை உதித்தது. இந்த வீட்டிலே, என் தந்தையின் கட்டுப்பாட்டிலே எத்தனைநாளைக்கென்று இருந்து கஷ்டப்படுவது? தொட்டிலில் பிள்ளைபோலும், கட்டித் தீன்போடும் காளைமாடுபோலும் எவ்வளவு காலம், ஆமாம், ஓர் அடிமை போன்று காலம் விடுவது? ஏன்? எனக்குச் சுதந்திரமில்லையா? இப்பரந்த உலகில் சுவாதீனமாக வாழ அப்படியென்ன ஒரு தகுந்த இடமில்லையா? நல்லது, இதற்கு ஒரு முடிவு காணத்தான் வேண்டும். முற்றுப்புள்ளி போடத்தான் வேண்டும். சரி, என் தந்தையைக் கண்டு பேசவேண்டும். எனக்குச் சுதந்திரம் அளிக்குமாறு பரிந்துகேட்கவேண்டும். அவர் ஏதும்தடை செய்தால் எனக்குத்தெரியும் என்ன செய்யவேண்டுமென்று. எழுந்துநடக்கின்றான், இறுமாந்த நடையிலே.

ஒரு நாள் பொழுது சாயுங்காலம். மாலை வெயில் மங்கும் நேரம். இதமாக வீசுகின்றது இளந்தென்றல். தந்தை அமைதியாக வீட்டின் நடுச்சாலையில் அமர்ந்திருக்கின்றார். அவனும் இது தான் நல்ல சமையமென்று அவர்முன் செல்லுகின்றான். சென்றதும்;

அப்பா, வந்தனம்.

வந்தனம் மகனே, என்ன காரியம் வந்தது?

அப்பா, ஒருவேண்டுகோள்,

மகனே, அஃது என்ன? தெரியச்சொல்.

"பிதாவே, தங்கள் ஆஸ்தியில் எனக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தை எனக்குத்தரவேண்டும்."

என்ன அவசரம்? எதற்காகத் தரவேண்டும்?

அப்பா, நான் வளர்ந்துவிட்டேன், தக்கபாரயம் அடைந்துவிட்டேன். எனது இளமையை—இளமையில் கல்வியை எனக்குண்டான புத்தி, யுக்தி சாதுரியத்தை இனிதே பயன்படுத்த வேண்டும். எங்காவது சென்று, சுதந்திரமாக வாழ்ந்து, முயற்சிப்பட்டு உழைத்து, பெரும் பொருள் ஈட்டவேண்டும். என் தந்தையாகய தங்கள் பெயரை நிலைநாட்டவேண்டும். "தோன்றிற் புகழொடு தோன்றுக" ஆகவே, தொட்டினில் கிள்ளைபோலும், ஊஞ்சலில் பிள்ளைபோலும் இனி மேலும் ஈண்டு நான் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கப் போவதில்லை. ஆதலால் தங்கள் ஆஸ்தியில் எனக்குவரவேண்டிய பாகத்தைப் பகிர்ந்துதரவேண்டும், தந்து என்னை வழியனுப்பி வைக்கவேண்டும்.

**— ஞானம் —**

இதைக் கேட்டதே சிம்ம சொற்பனம் கண்டவர்போல் பிதாவின் மனம் திக்கிட்டது. முகம் வேறுபட்டது. சிறிது வேளை ஆலோசித்துவிட்டுச் சாந்தமாகச் சொல்லுவார்: மகனே, ஆத்திரப்படாதே, அவசரப்படாதே, எழுந்தமானமாய் எதையும செய்ய எண்ணாதே, ஆய்ந்தோய்ந்துதான்செயலாற்ற வேண்டும். நான் சொல்வதைக் கேள். இந்தநாள்மட்டும் உன் தந்தை வீட்டில் நீ சுதந்திரமாகத்தானே வாழ்ந்தாய். இங்கே உனக்கு என்ன குறையிருந்தது? எனக்குண்டான சொத்துகளெல்லாம் உங்கள் இருவருக்கும்தானே. வேறு யாருக்கு? ஆகவே, என் சொல்லைத்தட்டாதே. "தந்தை சொல்மிக்கமந்திரமில்லை." என்றும்போல் இங்கேயே என்னுடனிருந்து, இஷ்டமாகவாழ்ந்து, உன்சொத்துகளையெல்லாம் ஆண்டனுபவித்துவருவாய் மகனே.

தந்தாய் நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், என்னுடைய எதிர்கால வாழ்க்கை சிறக்கவேண்டும், அதற்கு முற்போக்கு இருக்கவேண்டும. அந்தப் போக்கில் நான் முன்னேறிச்சென்று வெற்றிகாணவேண்டும். தந்தையைப்போல் தனயன் என்பது பிழையாகுமா? சிங்கத்துக்குப் பிறந்தது சிறிய நரிக்குட்டியாமா? தங்களுக்குப்போல எனக்கும் வீரமுண்டு, தீரமுண்டு, எதையும் சாதிக்கும் திறமையுண்டு. ஆதலால் தந்தாய், எனது முற்போக்குக்கு முட்டுக்கட்டைபோடாது ஆஸ்தியில் எனக்குரிய பாகத்தைத் தந்து, என்னை ஆசீர்வதித்து வழியனுப்பிவையுங்கள்.

மகனே, இளங்கன்று பயமறியாது. ஆபத்து எங்கே யென்று அதற்குத் தெரியவாராது. அதனால உன் தந்தையின் சொல்லைக்கேள். அழுங்குப் பிடியாய் நில்லாதே. உன் தந்தையின் வீட்டில் என்றும்போல இன்பமாய் வாழுவாய்.

ஆனால், அவனோ தான் பிடித்த முயலுக்குக் கால் மூன்றேயென்று பிடிவாதமாய் நின்றான். ஆமாம், பிடிவாதத்துக்கும் மருந்துண்டாமா? கெடுகுடி சொற்கேளாது, அவரை எதிர்த்தான், முறைத்துப் பார்த்தான். ஒருகை பார்க்க முனைந்தான், தான் நினைத்ததை நினைத்தபடியே தீர்வதாக ஊன்றுகொண்டு நின்றான்.

அவர்மனம் புண்ணாய்வருந்தியது. கண்டித்தார். இயன்றவரை தெண்டித்தார். அவன் மனம் இளகவில்லை. ஆகவே, கண்கள் இரண்டும் கலங்க, அவற்றிலிருந்து கண்ணீர் துளித்து இருகன்னங்களையும் நனைக்க, இரக்கமான பார்வையோடு ஏதோ இரந்துகேட்பார்போல் தன்புதல்வனை விழித்து: "போகாதே, போகாதே, என்புதல்வா, என்–புத்தியைத்தட்டி நீ போகாதே பொல்லாதார் துன்மதி கேளாதே, பொல்லாப்பு வந்து நீ மாளாதே. தோழர்கள் வந்துன்னைச் சூழ்வார்கள், தொட்டுக்கொள் அம்மா, தொட்டுக்கொள் என்று தட்டிச்சுற்றிக்கொண்டு போவார்கள், கெட்டு நொந்துபோவாய், தட்டழிந்து." புத்திகற்பித்தார். ஆனால், இதெல்லாம் செவிடன் காதில் சங்கநாதஞ் செய்தால்போன்று அவன் மட்டிலும் விழலாயிற்று. தந்தை மனமூடைந்தார். கண்ணீர் சிந்தினார். கடைசியாக அவன் எங்காவது போவானுக்கு என்றுவிருப்பும் வெறுப்புமாக மொழிந்தார். தனது ஆஸ்தியில் அவனுக்குரிய பாகத்தைப் பகிர்ந்து கொடுத்து அவனை வழியனுப்பி வைத்தார். அவனும் அதைப் பெற்றுக்கொண்டு அவருக்குப் பிரியாவிடைகூறி விடுதலை, விடுதலை, விடுதலையென்று விடுதலைமுழக்கஞ் செய்தபடியே வெளிகொண்டான்.

(வளரும்)

---

● சமீபத்திலே—தென்னமெரிக்காவைச் சேர்ந்த பேருகாட்டிலே உண்டாய 50,000 மக்களைப் பலிகொண்ட பயங்கர பூமியதிர்ச்சியிலே பாழடைந்த பகுதியில் திருத்தொண்டாற்றிய மிஷனரிய குருமாரும், கன்னியாஸ்திரிமாரும் யாதாமோர் சேவமோசமுமின்றிச் சேமமாயிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

---

## உலக கத்தோலிக்கரின் தொகை

இவ்வருடம் வெளிவந்த புள்ளி விபரங்களின்படி உலக கத்தோலிக்கரின் தொகை 618,760,000. புரொட்டஸ்தாந்தரின் தொகை 272, 018,000. ஒதொடொக்ஸ் கிறீஸ்தவர்கள் 142,433,000. கிறிஸ்தவரல்லாத பிறசமயத்தவர்களின் தொகை 2292,|000000. இவர்களில் முஸ்லீம் மதத்தவர் 509,000 000; இந்துக்கள் 444,000, 000. யூதர்கள் 13,960,000. அன்மினிஸ்ற், ஷின்ரொயிஸ்ற், பௌத்தர் தொகை 1326,000,000.

கத்தோலிக்கரில் பெருந்தொகையினர் ஐரோப்பாக் கண்டத்தில் வசிக்கின்றனர். இவர்களின் தொகை 255, 000,000. லத்தீன் அமெரிக்காவில் 226,000,000. வட அமெரிக்காவில் 55,000,000. ஆசியாவில் 47,000,000 ஆபிரிக்காவில் 32,000,000. ஓசானியாவில் 4,000,000. வளர்ச்சியடைந்துவரும் தேசங்களிலும் உள்ள கத்தோலிக்கரின் தொகை கிட்டத்தட்ட சரிசமனாக இருந்தபோதிலும் வளர்ச்சியடையாத தேசங்களில் குருமாரின் தொகை 22சத வீதமே.

## ஜெனறல் தெ கோல்

(1-ம் பக்கம் பார்க்கவும்)

கொண்ட ஹோட்டலில் அவர்கள் தங்கியிருந்தார்கள். அந்த அறைகளில் ஒன்று ஒரு சின்னக்கோவிலாக ஒழுங்கு செய்யப்பட்டு அந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு சலேசியன்குருவாகிய வண. நிக்கொலஸ் லூயிஸ் சுவாமியால் ஜெனறலுக்கும், அவர் கோஷ்டியினருக்குமாகப் பிரான்சிய பாஷையில் பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது: அதிலே அவரும், அவர் பாரியாரும் திவ்விய நன்மை பெற்றனர். மதிரித் நகரிலே ஜெனறல் பிரங்கோ அவர்கள் தெகோலுக்கு உத்தியோக முறையில் ஒரு விருந்தளித்தார்.

## மருதமடுத்.....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படுகிறது. அத்துடன் மருதமடு செல்ல முடியாதிருந்த மாதாவின் பக்தர்கள் அங்கே நடந்த திருச்சடங்குகளில் பங்குபெற உதவியாக இலங்கை வானொலி நிலையமும் சேவை செய்தது பாராட்டுக்குரியதே.

## இது அநேகருக்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிந்துதலின் பெறுபேறு எத்தகையது என்பதைப்பற்றிய உணர்வைத் தந்து, அத் தூய இரத்தத்தின் பெறுபேறுகள் வீண்போகாதவாறு பயன்படுத்தக்கூடியதாய் நம்மைப் பக்குவப்படுத்துகிறது. இவ்வித பக்குவமடைந்த நாம் அவரது மீட்புப் பணியைத் தொடர்ந்து நடத்துவோம்.

### எத்தியோப்பிய அரசர் கத்தோலிக்க பாடசாலையை

## அங்குரார்ப்பணம் செய்தார்

சென்ற வைகாசி மாதம் 19-ந்தேதி எத்தியோப்பிய தேச அரசர் ஹெயிலி சலாசி அவர்கள் தன்தேசத் தலைநகராகிய அடிசபாபா நகரின் கத்தோலிக்க மாதேவாலய வளவில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஓர் ஆண்பாடசாலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அப்போது உலகின் பல பாகங்களிலும் கத்தோலிக்க குருமாரும், கன்னியர்களும் செய்துவரும் அரியதொண்டை அவதானித்து, தானும் அவர்களது முயற்சியினால் தன் நாட்டுக்கு நன்மை தருவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இப்பாடசாலையை நிறுவ உதவியருளினார் எனக் கூறினார். இதுகால வரையும் அத் தேசத்திலே அநேக கிறீஸ்தவ பாடசாலைகள் இருப்பினும் இதுவே அந்நகரிலுள்ள முதற் கத்தோலிக்க உயர்தர பாடசாலையாகும்.

## போலாந்தில் குருத்துவஅழைத்தல்

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள கத்தோலிக்க போலாந்திலே குருத்துவ அழைத்தல்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இந்த ஆண்டிலே சென்ற ஆனிவரை அந்நாட்டிலுள்ள மேற்றிராசன குருமடங்களில் 743 மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். சென்ற 1969-ம் ஆண்டில் 706 மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டனர். தற்போது அங்குள்ள மேற்றிராசன குருமடங்களில் 3,327 மாணவர்கள் வேதசாஸ்திரம் கற்றுவருகின்றனர். இவர்களில் 998 பேர் சந்நியாசசபைகளைச் சேர்ந்தவர்கள். 385 குருத்துவ மாணவர்கள் தங்கள் இராணுவசேவையை ஆற்றிவருகிறார்கள்.

## திருச்சபையில் இனபேதிக்கு இடமில்லை

ஆபிரிக்க சாம்பிய பிரிவிலுள்ள மேற்றிராணியாரில் ஒருவராகிய மொசி அடிகளார் அண்மையில் தம்து மக்களுக்கு எழுதிய நிருபத்தில் "திருச்சபையில் இனப்பிரிவுகளுக்கு இடமேயில்லை. அதிலுள்ள அங்கத்தவர் யாவரும் கத்தோலிக்கரே தவிர ஜெர்மானியர், பிரான்சியர், ஆங்கிலேயர் என்ற வெவ்வேறு இனத்தவர்களில்லை" என்று குறிப்பிட்டார். அவர் இவ்வாறு கூறியதற்குகாரணம்யாதெனில் அங்கு நிறத்தவர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் உள்ள வித்தியாசங்களேயாகும். யாவரும் கிறிஸ்துவின் பிள்ளைகள் என்பதையும், சம உரிமை உள்ளவர்கள் என்பதையும், தமது மேற்றிராசனத்திலுள்ள மக்களுக்கு நினைவூட்டவே இந்த நிருபத்தை எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி
### ஆடி — 1970

| | | | |
|---|---|---|---|
| 19 | ஞாயிறு | வருடத்தின் 16-ம் ஞாயிறு | [ப] |
| 20 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 21 | செவ்வாய் | ” | [ப] |
| 22 | புதன் | புனித மக்டலின் | [வெ] |
| 23 | வியாழன் | தினப் பூசை | [ப] |
| 24 | வெள்ளி | தினப் பூசை | [ப] |
| 25 | சனி | சந்தியோகுமையோர் | [சி] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# எது உண்மை

உண்மை என்றால் என்ன? நாம் நினைப்பதுபோல் அவ்வளவு சுலபமாக இதற்கு விடை கூறி விட முடியாது. பொய் இல்லாததே உண்மை என்றால் பொய் என்பது என்ன என்ற ஆராய்ச்சியில் இறங்க வேண்டி வரும். காலத்துக்குக் காலம் சொற்களின் கருத்து மாறிக்கொண்டு வருவதைச் சில சமயம் காண்கிறோம். உண்மை என்ற சொல்லின் கருத்தும் இப்படித்தான் மாறிக்கொண்டு வருகிறதா என்றுகூட ஐயுறவேண்டியிருக்கிறது. சடப்பொருள்களின் ஆராய்விலேயே தன் திறமை முற்றையும் செலவிடும் இன்றைய மனிதன் புலன்களுக்குத் தென்படுவனதான் உண்மை என்று கூறினாலும் வியப்படைவதற்கில்லை. நடந்து போன காரியங்கள், தற்போது நடக்கும் காரியங்கள் உண்மையென்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எதிர்கால நிகழ்ச்சிகளைப்பற்றி இந்த அளவுக்கு உறுதி இல்லை. அப்படியென்றால் நடந்த நிகழ்ச்சிகளும் சடப் பொருள்களும்தான் உண்மையா? இலக்கிய நூல்கள், நீதிகள், சமய உண்மைகளை உருவகப்படுத்திக் கூறும் வரலாறுகள், இவையெல்லாம் மெய்யாக நிகழ்ந்தவை அல்ல என்பது எமக்குத் தெரியும். எனினும் அவற்றைப் பொய் என்று உரைக்கலாமா? இங்கு காணப்படுவன புலனுக்குப் புலப்படாதவை, முன்பு நிகழாதவைதான். என்றாலும் அவற்றின் அடிப்படையில் உண்மை இழையோடவில்லையா? எமது பழைய ஏற்பாட்டு வரலாறுகளையே எடுப்போம். அவற்றுள் பல சரித்திர நிகழ்ச்சிகளல்ல, உருவகங்கள்தான் என்று கூறப்படுகின்றது அதற்காக உண்மையைப் புலப்படுத்துவதற்கே எழுந்த இந்த அமைப்புகளை பொய் என்று தள்ளிவிடலாமா?

மனிதன் இன்று தனது அறிவை வெளி நோக்கியே செலுத்திக் கொண்டிருக்கிறான். தனக்கு வெளியே உள்ள புறப்பொருள்களை ஆராய்கிறானே ஒளிய, தன் அகத்துள் இருக்கும் இறைவனை மறந்துவிடுகிறான். இதற்குக் காரணம் ஐம்புலனறிவால் உணரக்கூடியனவே உண்மை என்று அவன் கருதுவதுதான். அறிவியல் பூரணமானதன்று. அது உண்மையின் ஒரு கூறுதான், மனிதன் தன் முயற்சியால் கண்டு பிடிக்கும் உண்மைகள் மட்டுமே அதில் அடங்கும். ஆனால், மனிதன் தன் முயற்சியாலன்றி நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளும் சில உண்மைகளும் உள. அவைதான் இறை வெளிப்பாடு. இறைவன் வெளிப்படுத்திய உண்மைகளை அறிவியலின் மூலம் பெற முடியாது அதைப் பிறர் வாயிலாகவே கேட்டறிய வேண்டும் நாம் விளங்கிக்கொள்ள முடியாத ஒன்றைப் பிறர் வாயிலாகக் கேட்டு ஏற்றுக் கொள்வதென்றால் அதற்கு ஏற்ற மனப்பக்குவம் இருக்க வேண்டும். “தெய்வீக அறிவைப் புத்தகத்திலிருந்து பெற முடியாது” என்று இதற்காகத்தான் காந்தியடிகள் கூறினார் போலும். மனித இதயத்திலேயே சில உண்மைகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை உணர்ந்து கொள்ளும் பரிபக்குவத்தை அடைவதற்கு ஒருவனது பண்பாடும், ஒழுக்கமும் துணைபுரியும். விசுவாசம் இறைவனது கொடை. ஆனால், அதைப் பேணிப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் அவரவர் செய்கை. அவ்விசுவாசம் உயிருள்ளதாய் இருக்க வேண்டும், உயிருள்ள எதுவும் ஒரே கட்டத்தில் நிற்பதில்லை. அது ஒன்றில் வளரும், அல்லது தளரும்.

இன்று வெளியுலக இரைச்சல்கள் எம் காதைச் செவிடுபடுத்துகின்றன. அந்த இரைச்சலில் இறைவனது மெல்லிய குரலைக் கேட்கக் கூடிய சக்தியை இழந்து விடக்கூடிய ஆபத்து ஏற்படுகின்றது. இறை வெளிப்பாட்டிலும் எம் இதயத்தின் ஆழத்திலும், எமது சூழ்நிலைகளிலும் தேங்கி நிற்கும் உண்மைகளை மனமென்னும் நுட்பமான கருவிமூலம் கிரகிக்கப் பழகவேண்டும். அப்போதுதான் உண்மையின் பூரண வடிவத்தைக் காணக்கூடியதாயிருக்கும்.

# “இது அநேகருக்காகச் சிந்தப்படும் புதிய உடன்படிக்கையின் என்னுடைய இரத்தமாய் இருக்கின்றது”

(புனித மாற்கு. 4-ம் அதி. 24-ம் வச,)

‘பலிஇன்றி வேதம்இல்லை’, ‘இரத்தம் சிந்தப்படாமல் பாவமன்னிப்பு இல்லை’. ஆடி மாதத்தில் நம் இரட்சகரின் விலைமதித்தற்கரிய திரு இரத்தத்தின் பேறுபலன்களைச் சிந்திக்கும்படி நம் அன்னையாம் திருச்சபை நமக்கு நினைப்பூட்டுகிறது. ஏனெனில், அவர் செத்த கிரிகைகளில் நின்றும் மக்களை மீட்கும்படி தூயஆவியானவரின் ஏவுதலால் தாவீதாசர் பாடியபிரகாரம் (39-ம் சங்கீதம் 8-ம் வசனம்) “காளைகளினதும், கிடாரிகளினதும் இரத்தம் பாவத்தை நீக்க மாட்டாதென்றும், ஆண்டவரே இவற்றை நீர் வெறுத்து எனக்கு ஒரு சரீரத்தைக் கொடுத்து, பாவத்துக்குப் பரிகாரம் பண்ணும்படி கேட்டீர். இதோ வருகிறேன். தேவரீருடைய திருச்சித்தம் நிறைவேற்ற” என்று சொல்லி, தம்மைத்தாமே பலியாக்கி, தமது கடைசித்துளிவரை இரத்தம் சிந்தி மக்களை இரட்சித்தார்.

ஆபேல், ஆபிரகாம், மெல்கிசெதேக் போன்ற பிதாப்பிதாக்கள் செலுத்திய பலிகள் எல்லாம் நம் இரட்சகர் செலுத்திய கல்வாரிப்பலியின் அடையாளமாயும், இறைமக்கள் இறைவனுடன் ஒப்பரவாகவும், இறைவாக்குகளுக்குச் செவிகொடுத்து, கல்வாரிநோக்கித் தம்வாழ்வைக் கொண்டுசெல்லத் தூண்டுதலாயும் இருந்தன. பிதாப்பிதாவாகிய மோசேஸ் செலுத்திய நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைப் பலி கிறீஸ்துவால் ஒப்புக்கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கைப் பலியின் அறிகுறியாய் இருந்ததன்றி, எவ்வித பாவமன்னிப்பையோ, இரட்சிப்பையோ தரக்கூடியதாய் இருக்கவில்லை. எவ்வாறெனில் (யாத். 24-ம் அதி. 8-ம் வச.) “அந்நாட்களில் பிதாப்பிதாவாகிய மோசேஸ் நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையை மக்கள் முன்னிலையில் வாசித்து, காளைகளினதும், வெள்ளாட்டுக்கடாக்களினதும் இரத்தத்தைத் தண்ணீருடன் கலந்து ஈசோப்பென்னும் புல்லினால் தெளித்து சர்வேசுரன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொல்லி இறைமக்களைப் புதிய உடன்படிக்கையின் கல்வாரிப் பலிக்குத் தயாரித்தார்.

ஆயின், பிதாவின்வார்த்தையில் உருவான கிறீஸ்துவோ (எபி. 9-ம் அதி. 12-ம் வச.) “தமது சொந்த இரத்தத்தினால் பரிசுத்த ஸ்தானத்துள் பிரவேசித்து நித்திய இரட்சணியத்தை நமக்குப் பெற்றுத்தந்தார், எவ்வாறெனில், இறைவனின் வாக்காகிய அவர் இவ்வுலகில்வாழ்ந்த காலத்தின் கடைசி இரவு தமது முழுமையான அன்பை விளக்கத் தம்மையே அவர்களுக்குக் கையளிக்கவும், இரத்தம்சிந்திப் பலியாகவும் சித்தங் கொண்டார், இதுவே பிதாவின் சித்தமாகவும் இருந்தது. இரா விருந்துணவின்போது தாம் பலியாகப்போவதைத் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலருக்கு அறிவிக்க விரும்பி அவர்கள் முன்னிலையில் அப்பத்தையெடுத்து ஆசீர்வதித்து பிட்டு, “இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் சரீரம் என்றார். அப்படியே கிண்ணத்துடன் இரசத்தைஎடுத்து “இது அனேகருக்காகச் சிந்தப்படும் என் புதிய உடன்படிக்கையின் இரத்தம் என்றார். ‘ஒருவன் தன் சினேகிதனுக்காகச் சீவனைக் கொடுக்கிறதைவிட அதிகமான சினேகம் எவனிடத்திலும் இல்லையென்று விளக்கியவர், “நானே பரலோகத்தில் இருந்து இறங்கிய சீவிய அப்பம்; என் வழியாய் அன்றி எந்த மனிதனும் பிதாவின் இராச்சியத்தில் பிரவேசிக்க முடியாதென்று திட்டமாக அறியவைத்தார். தமது அன்பின் கொடையாகிய இப்பலிப்பொருளை தமது திரு உதிரத்தைச் சிந்தியே தயாரித்தார், இத்தூய உதிரமே புதிய உடன்படிக்கையின் அச்சாரமாகி, மண்ணுலகை சுனத்து, தூய்மைப்படுத்தி விண்ணரசின் கபாடத்தைத் திறந்தது. இத்தெய்வீக அன்புச்செயலைச் சிந்திக்கிறோமா? அவரது தூய இரத்தத்தின் புதிய உடன்படிக்கையின் அர்த்தம் என்ன என்பதை உணருகிறோமா?

நம் அன்பின் இரட்சகர் தொடக்கிவிட்ட மீட்புப் பணியைப் பீடப்பலி மூலம் நம் திருச்சபை தொடர்ந்து நடத்துகிறது. அப்போஸ்தலர், வேதசாட்சிகள், புனிதர்முதலியோர் செபம், தபம், தியாகம் முதலியவற்றின் உதவியால் கிறீஸ்துவுடன் ஒன்றிக்கின்றனர். இவர்கள் வழியாகக் கிறீஸ்துவே தமது மீட்புப் பணியைத் தொடர்ந்து நடத்துகிறார். எவ்வாறெனில், நம் மீட்பர் பரி. பவுல் அப்போஸ்தலர் மனந்திரும்புமுன் கிறீஸ்தவர்களை உபாதைப்படுத்திய போது சவுலே சவுலே என அழைத்து, “நீ உபாதைப் படுத்தும் கிறீஸ்து நாமே” என்றார், உண்மையாகவே கிறீஸ்துவுக்காக கிறீஸ்தவன் படும் கஷ்டங்கள் துன்பங்கள், உபத்திரவங்கள், இரத்தம் சிந்துதல்கள் அனைத்தும் கிறீஸ்துவின் பாடுகளைத் தொடர்ந்து நடத்தி மீட்புப் பணியை நிறைவேற்றுகிறது. இதனாலேயே இன்றும் நம் திருச்சபை புனிதமடைந்து, தலைநிமிர்ந்து, செங்கோல் ஓச்சுகிறது. புனித பிரான்சிஸ்அசிசியார், நியூமன் திரேசா, வண. பியோ சுவாமி அவர்கள் கிறீஸ்துவின் இரத்தம்சிந்தும் பணியை வெளிப்படையாக உலகுக்கு அறியச்செய்யத் தமதுமேனிகளில் ஐந்துதிருக்காய வரத்தைப் பெற்றனர் என்பது நாமறிந்தவிஷயம்.

நம் அரிய மீட்பரின் திரு இதயத்தில் நின்றும் புறப்பட்ட இரத்தத்தின் கிரயத்தால் அல்லவா ஒவ்வொரு மனிதனும் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டான், அவரது தூய இரத்தம் சிந்திய பலியே நம்மைப் பிதாவின் சுதந்திர மக்களாக்கியது. இவ்வித அன்பின் கிரயத்தை நாம் அவம் போக்கலாமா? நம் குருக்கள் பாத்திரத்தில் காணிக்கையாக்கும் இரசம் அவரது இதயத்தினின்றும் புறப்படும் வார்த்தைகளால் மாறுதல் அடையும் இரத்தத்துளி அல்லவா? நாம் உட்கொள்ளும் திவ்விய நற்கருணை நமக்கு ஜீவனைத்தரும்ஆன்மபோசனம் அல்லவா? இவ்வுலகில் அவர் வாழ்ந்தபோது அவர் உச்சரித்த ஒவ்வொரு வார்த்தையிலும் அவரது தெய்வீக வல்லமை புறப்பட்டுப் புதுமை செய்ததை நாம் அறிவோம். அன்று கானாவூர்க் கலியாண வீட்டில் அவரது தெய்வீகவல்லமை பொருந்திய வார்த்தைகளால் தண்ணீரை இரசமாக்கினார். இன்று அவரைப் பின்பற்றும் குருமார் அவர் உச்சரித்த அதே வார்த்தைகளை உச்சரித்து இரசத்தை அவரது திரு இரத்தமாக்குகின்றனர். அவர் பாவித்த அதே வார்த்தைகளை உச்சரித்து அப்பத்தை அவரது திருச் சரீரமாக்குகின்றனர். உத்தானத்தின் கிறீஸ்துவை உட்கொண்டு அவருடன் ஒன்றிக்கின்றனர். இவ்வித ஒன்றிப்பு அவனவன் விசுவாசத்துக்குஏற்றபடி பயன்படுகிறது. இந்த விசுவாசமே நமது இதயத்துக்கு அவரது இரத்தம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

— நாதன் —

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆடு ஆடிமீ 18ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: “கதலிக் பிறஸ்” யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org